

தமிழ்நாடு சட்டப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2009–2010)

(பதின்மூன்றாவது பேரவை)

ஒன்பதாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் 7.MAY.2010)

சட்டப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 002.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2009–2010)

(பதின்மூன்றாவது பேரவை)

ஒன்பதாவது அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

பக்கம்

1. 2009–2010 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு .. iii

2. முகவுரை .. v

3. அறிக்கை .. vii

இணைப்பு–1

1. 2005–2006–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் 23–வது ஆண்டறிக்கை .. 1–2

2. 2006–2007–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் .. 3–4

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் .. 5


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2009–2010 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு

(2009–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் நியமனம் செய்யப்பட்டது)

தலைவர்

திரு. பெ.சு. விஜயகுமார்

உறுப்பினர்கள்

திரு. என். மாலைராஜா
திரு. அ. சின்னசாமி
திரு. எஸ்.எஸ். குருசாமி
திரு. என்.கே.ஆர். சூரியகுமார்
திரு. செ. பொன்னுதுரை
திருமதி. எஸ். தேன்மொழி
டாக்டர் (திருமதி) கே.காயத்ரி தேவி
திரு. வீ.ஏ.டி. கலியவரதன்
திரு. தி.க. ராஜா
திரு. வே. மாரிமுத்து

செயலகம்

திரு. மா. செல்வராஜ்	:	செயலாளர்
திருமதி இரா. அமிர்தவல்லி	:	இணைச் செயலாளர்
திரு. இரா. பழனிசாமி	:	சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முகவுரை

தமிழ்நாடு சட்டப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு, பொதுத் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 2005–2006–ஆம் ஆண்டிற்கான 23–வது ஆண்டறிக்கை மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2006–2007–ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் குறித்து 30.10.2009 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள 'தமிழகம்' விருந்தினர் இல்ல குழுக் கூட்ட அறையில் ஆய்வு செய்தது. ஆய்வு செய்தபோது இது குறித்து சம்பந்தப்பட்ட துறைகளின் அரசு அதிகாரிகள் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு காலதாமதத்திற்கான விளக்கத்தினை அளித்தனர். அரசுத் துறை அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான ஒன்பதாவது அறிக்கையை (2009–2010) குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு வாணிபக் கழகம் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரிய அரசு அதிகாரிகள் அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் வரைவு அறிக்கைக்கு 26.03.2010 அன்று குழுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது.

3. குழுவின் பணிகளுக்கு பெரிதும் உதவிய சட்டப் பேரவைச் செயலாளருக்கு குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 002,
26.03.2010
பங்குனி–12,
திருவள்ளுவராண்டு–2041.

பெ.சு. விஜயகுமார்
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை

தமிழ்நாடு சட்டப் பேரவையின், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு (2009–2010) 30.10.2009 அன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில், தமிழ்நாடு வாணிபக் கழகம் / தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகிய கழகங்களின் ஆண்டறிக்கை / தணிக்கை அறிக்கை / கணக்குகள் கால தாமதமாகப் பேரவைக்கு அளிக்கப்பட்டமைக்கான காரணத்தை ஆய்வு செய்து அத்துறை அலுவலர்கள் அளித்த விளக்கத்தின் மீதான 2009–2010–ஆம் ஆண்டிற்கான குழுவின் **ஒன்பதாவது அறிக்கை.**

சென்னை–600 002,
26.03.2010
பங்குனி–12,
திருவள்ளுவராண்டு–2041.

பெ.சு. விஜயகுமார்
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றம்
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு – 1

தமிழ்நாடு மாநில வாணிபக் கழக அலுவலர் பதிலின் மீதான குழுவின் கருத்துரை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 2005–2006–ஆம் ஆண்டிற்கான இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை	2005–2006	31.03.2007	18.10.2007	6 மாதங்கள் 17 நாட்கள்

துறையின் பதில்

(6)

தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் மேலாளர் அவர்கள் குழு குறிப்பிடுகிற அறிக்கையினை அவைக்கு அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு காரணம் சட்டமுறை தணிக்கையாளர் நியமிப்பதில் சற்று காலதாமதம் ஏற்பட்டது எனவும், அதன் தொடர்ச்சியாக 2005–2006–ஆம் ஆண்டிற்கான 23–வது ஆண்டறிக்கையை பேரவைமுன் வைப்பதிலும் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், அதற்குப் பிறகு 2006–2007 மற்றும் 2007–2008–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் உரிய காலத்திற்குள் பேரவைக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும், இதுபோன்ற தவறுகள் எதிர்காலத்தில்

துறையின் பதில் தொடர்ச்சி
(6)

நடைபெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். மேலும், 2008–2009–ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்த ஆண்டறிக்கை பொதுக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு சமர்ப்பிக்க தயாராக உள்ளது எனவும் தெரிவித்தார்.

மேலும், 2005–2006–ஆம் ஆண்டுக்கான 23–வது ஆண்டறிக்கை காலதாமதமாக பேரவையில் வைக்கப்பட்டதற்கான காரணங்கள் குறித்து துறையின் அமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்புதல் பெறப்பட்ட விளக்க அறிக்கையினை குழுத் தலைவரிடம் அளித்தார்.

தற்போது தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு நிதித் துறையின் அறிவுரையின்படி கணக்குகள் தொகுக்கப்பட்டு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உள் தணிக்கைக்கு கொடுத்து அவ்வறிக்கையினை Comptroller and Auditor General of India-க்கு சப்மிட் செய்யப்பட்டு 2006–2007, 2007–2008 மற்றும் 2008–2009–ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகளை குறித்த காலத்தில் முடித்துள்ளதாகவும், 2009–2010–ஆம் ஆண்டு கணக்குகளில் ஏப்ரல்–ஜூன் காலாண்டுக்கான கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் காலதாமதம் இருக்காது என குழுவின்முன் சாட்சியம் அளித்தார்.

குழுவின் கருத்துரை
(7)

காலதாமதத்திற்கான காரணங்கள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒப்புதல் பெற்ற விளக்க அறிக்கை ஆண்டறிக்கையுடன் இணைத்து குழுவிற்கு சமர்ப்பிக்காதது குறித்து குழு வருந்துகிறது. இனி வருங்காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் நிகழாவண்ணம் நடவடிக்கை எடுக்க குழு வலியுறுத்தியதோடு, 2005–2006–ஆம் ஆண்டிற்கான 23–வது ஆண்டறிக்கை பேரவைமுன் வைத்ததற்கு ஏற்பட்ட காலதாமதத்திற்கு கழகத்தின் மேலாளர் அளித்த விளக்கத்தை ஏற்றுக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பதிலின் மீதான குழுவின் கருத்துரை

கழகத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைக்கு அளிக்கப்பட வேண்டிய நாள்	பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	2006–2007	31.03.2008	12.11.2008	7 மாதங்கள் 11 நாட்கள்

துறையின் பதில்
(6)

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் இணை இயக்குநர் அவர்கள் இத்துறையில் Statutory Board Member மற்றும் Internal Auditors உள்ளார்கள். அவர்களுடைய தலைமை அதிகாரியினை அழைத்து கூட்டம் நடத்தி அறிக்கைகளுக்கு ஒப்புதல் பெறப்படுகிறது என்றும் இவ்வறிக்கை சமர்பிக்கப்படும்போது பணியாளர்கள் பற்றாக்குறை இருந்ததாகவும் தற்போது கூடுதலாக 10 பணியாளர்களை நியமனம் செய்து பணிகள் விரைவாக முடிக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

துறையின் பதில் தொடர்ச்சி
(6)

மேலும், 2007–2008–ஆம் ஆண்டிற்கான அறிக்கை அச்சிடப்பட்டு தயார் நிலையில் உள்ளதால் வரும் கூட்டத்தொடரில் பேரவைக்கு அளிக்கப்பட்டுவிடும் எனவும் தெரிவித்தார். 2008–2009 மற்றும் 2009–2010–ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகள் பேரவைக்கு அளிக்கும் விதத்தில் கூட்டம் நடத்தப்பட்டு உள்தணிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. வாரியத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள உதவி இயக்குநரால் உள்தணிக்கை செய்யப்பட்டு தலைமை அலுவலகத்தில் ஒப்புதல் பெறப்பட்டு அனைத்தும் தொகுக்கப்பட்டு துறை அமைச்சரிடம் ஒப்புதல் பெற்று பின்பு அச்சிடப் பெறவேண்டும். இந்நேர்வில் உதவி இயக்குநர்களிடம் ஒப்புதல் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாக தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் அறிக்கை அளிப்பதில் காலதாமதத்தினை தவிர்க்கும்பொருட்டு அனைத்து உதவி இயக்குநர்களுக்கும் அனுப்பப்பட்ட கடித்தின் நகல் குழுவின்முன் சமர்ப்பிக்கப்பட்டது.

குழுவின் கருத்துரை
(7)


கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 2006–2007–ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் காலதாமதமாக பேரவைக்கு அளித்ததற்கான விளக்கத்தினை ஏற்றுக்கொள்ளலாம் என குழு முடிவு செய்தது.

இணைப்பு–2

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்

28.8.2009	சென்னை
29.10.2009 மற்றும் 30.10.2009	நீலகிரி (உதகமண்டலம்)
08.01.2010	சென்னை
26.01.2010 முதல் 04.02.2010 வரை	வட இந்திய மாநிலங்கள்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்